# பெருமானார்(?)

*அபூ அப்தில்லாஹ்*

*சமரசம் முஜீபிடம் ஒரு கேள்வி :*

‘பெருமானார்’ எனும் வார்த்தையை ஹிந்துச் சகோதரர்கள் தங்களின் கடவுள்களைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்கள். (சிவ பெருமான், முருகப் பெருமான்....) ஆகவே நாம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் குறிப்பிட ‘பெருமானார்’ எனும் சொல்லைப் பயன்படுத்தலாமா?

*முஜீபின் பதில் :* தாராளமாக! பெருமான் என்பது நல்ல, அழகான, பொதுவான தமிழ்ச் சொல். அதன் பொருள் பெருமைக்கு உரியவர், தலைவர் என்பதே! ஆகவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை ‘பெருமானார்’ என்று தயக்கமின்றிக் குறிப்பிடலாம்.

*சமரசம் 16-30 நவம்பர் 2001, பக். 23*

கேள்வியை ஒன்றுக்குப் பல முறை படியுங்கள். பதிலையும் படியுங்கள். எவ்வளவு அழகான கேள்வி. எவ்வளவு வெறுக்கத் தக்க பதில். புரோகித முல்லாக்களுக்கும் அவர்களின் பக்த கோடிகளுக்கும் மார்க்கம் அவர்களின் அப்பன், பாட்டனின் பரம்பரைச் சொத்து என்ற நினைப்புப்போலும். எனவே **நீங்கள் ஒன்றை வெறுக்கலாம்; ஆனால் அது உங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்; நீங்கள் ஒன்றை விரும்பலாம்; ஆனால் அது உங்களுக்குத் தீமை பயப்பதாக இருக்கும். (இவற்றையெல்லாம்) அல்லாஹ் அறிவான்; நீங்கள் அறியமாட்டீர்கள் (2:216)** என்ற அல்லாஹ்வின் தெளிவான எச்சரிக்கையைப் புறக்கணித்து விட்டு அவர்களின் அறிவு சரி கண்டதை எல்லாம் மார்க்கம் என்று மக்களுக்குப் போதிக்கத் துணிந்து விடுகின்றனர். அல்லாஹ் அல்குர்ஆனில் **‘களங்க மற்ற மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியது (39:3) விதிக்கவும் விலக்கவும் உள்ள அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது** (பார்க்க : 2:284, 3:154, 5:44,45,47, 6:57,62, 7:54, 12:40,67, 16:116, 28:70,88) அல்லாஹ் விதிக்காததை விதிப்பவர்கள் அல்லாஹ்வுக்கு இணையாளர்களே; அதை ஏற்று நடப்பவர்கள் இணை வைப்பவர்களே (பார்க்க 42:21) என்றெல்லாம் மிக மிகக் கடுமையாக எச்சரிப்பதெல்லாம் இவர்களுக்கு இரண்டாம் பட்சமே. அதாவது அவர்களின் அறிவு கூறும் கருத்திற்கு அடுத்த கருத்தே. பெரும்பான்மை மக்கள் எதை விரும்புகிறார் களோ எதைச் சரி காண்கிறார்களோ, எதை நடைமுறைப் படுத்துகிறார்களோ அவற்றை மார்க்கமாக்குகிறவர்களே புரோகித முல்லாக்களும் அவர்களின் பக்த கோடிகளும். காரணம் மக்களின் தயவில் தங்களின் வாழ்க்கையை ஓட்டுகிறவர்கள்; மக்களிடம் கையேந்துபவர்கள்; மக்கள் புறக்கணித்து விட்டால் இவர்கள் பாடு திண்டாட்டம்தான். எனவே மக்களின் மனங்கோண இவர்கள் ஒரு போதும் நடக்க முடியாது. எனவே மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று முடிவு கட்டிக் கொண்டவர்கள்; இல்லை என்றால் இப்படியொரு உருப்படாத பதிலைத் தருவார்களா? கேள்வி கேட்டவர் எவ்வளவு அழகான முறையில் தனது கேள்வியைக் கேட்டுள்ளார்.

'பெருமானார்' எனும் வார்த்தையை ஹிந்து சகோதரர்கள் தங்களின் கடவுளைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்கள் என்று கூறி சிவ பெருமான், முருகப் பெருமான் என்று உதாரணமும் கொடுத்துள்ளார். இந்தப் பெயரை நாம் இறைவனின் அடியாரான - தூதரான - மனிதரான நபி(ஸல்) அவர்களுக்குச் சூட்டலாமா? அப்படிச் சூட்டுவதால் இறைவனோடு நபி(ஸல்) அவர்களையும் இணைத்து எண்ணும் தவறுக்கு வாய்ப்பு உள்ளதே என்றே கேள்வி கேட்டுள்ளார். கேள்வியின் நோக்கத்தை முறையாகப் புரிந்தவர் என்ன செய்யவேண்டும்? இதற்கு குர்ஆன், ஹதீஸ் ஆதாரம் இருக்கிறதா? என்றே பார்க்கவேண்டும். நபி(ஸல்) அவர்களை எவ்வாறு எல்லாம் அழைக்கப்பட்டதாக ஹதீஸ்களில் வந்துள்ளது? எவ்வாறு அழைக்கக்கூடாது என்று ஹதீஸில் எச்சரிக்கப்பட்டுள்ளது? என்று பார்க்கவேண்டும். அப்படி பார்க்கும் போது இந்த 'பெருமானார்' குர்ஆனிலோ, ஹதீஸிலோ நபி(ஸல்) அவர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள எந்த அரபி பதத்தின் மொழி பெயர்ப்பும் அல்ல என்பது உறுதியாகத் தெரிகிறது. இதை, **பெருமான் என்பது நல்ல, அழகான பொதுவான தமிழ்ச் சொல் அதன் பொருள் பெருமைக்கு உரியவர்; தலைவர் என்பதே** என்று எழுதியிருப்பதே நன்கு உணர்த்துகிறது. ஆக இவர்களாக கற்பனை செய்து சரிகண்டு வைத்துக் கொண்ட ஒரு பெயரே அல்லாமல் வேறில்லை என்பதும் உறுதியாகத் தெரிகிறது. இவர்களாகக் கற்பனை செய்து வைத்துக் கொண்ட பெயரை நியாயப்படுத்த கூறப்பட்டுள்ள காரணம் **'பெருமான் என்பது நல்ல, அழகான பொதுவான தமிழ்ச் சொல்; அதன் பொருள் பெருமைக்குரியவர்; தலைவர் என்பதே'** என்பதாகும். இப்படி அவர்களின் அறிவு சரி கண்டதால் அது மார்க்கம் ஆகிவிடுமா? அப்படி அறிவு சரிகண்டு அதை மார்க்கம் ஆக்க அல்லாஹ் அனுமதித்துள்ளானா? அல்குர்ஆன் வசனங்கள் 2:284, 3:154, 5:44,45,47, 6:57,62, 7:54, 12:40,67, 16:116, 28:70,88 என்ன கூறுகின்றன என்பதை இவர்கள் ஓதி உணரவில்லையா?

சரி! இந்த புரோகித முல்லாக்களும், அவர்களின் பக்த கோடிகளும் இந்த "பெருமானார்" பதத்தை இந்த அளவு குரங்குப் பிடியாகப் பிடித்து அதை நியாயப்படுத்தி வருகின்றனரே? இதை இவர்களுக்கு அறிமுகப் படுத்தியது குர்ஆனுமல்ல; ஹதீஸுமல்ல; பின் யார்? என்று பார்த்தால் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு முஹம்மதிய மதத்தை (இஸ்லாமிய மார்க்கத்தை அல்ல) அறிமுகப்படுத்திய சூஃபியாக்களே என்ற உண்மை தெரியவருகிறது. இந்த சூஃபியாக்கள் யார்?

மனிதனும் தெய்வமாகலாம் என்ற மாற்று மதங்களின் 'அத்துவைத' கோட்பாட்டை இஸ்லாத்தில் கொண்டு வந்து நுழைத்த பாவிகளே இந்த சூஃபியாக்கள்; அதாவது முஸ்லிம்களை அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் மாபாதகத்தைச் செய்ய வைத்தவர்களே இந்த சூஃபியாக்கள்.

இந்த சூஃபியாக்களின் போதனை காரணமாக அல்லாஹ்தான் ரசூல்; ரசூல்தான் அல்லாஹ் என்று கூறும் ஒரு பிரிவினரும் முஸ்லிம்களில் உள்ளனர். பெரும்பாலான பள்ளிகளில் நீங்கள் **"லா இலாஹ இல்லல்லாஹ்; முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்"** என்று முழுமையாகத் தெளிவு படுத்தி எழுதுவதற்குப் பதிலாக மிஹ்ராபின் வலது பக்கம் 'அல்லாஹ்' என்றும் இடது பக்கம் 'முஹம்மது' என்று அரபியில் மொட்டையாக எழுதி இருப்பதைப் பார்க்கலாம். அது மட்டுமல்ல பெரும்பாலான வீடுகளிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். திருமணம் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளில் செய்யப்படும் மின் அலங்காரங்களிலும் இந்த **அல்லாஹ் முஹம்மது** கண்டிப்பாக இடம் பெறும். இன்னும் சிலர்

வழிகேட்டில் மேலும் முன்னேறி **யா அல்லாஹ், யா முஹம்மது** என்று மின் அலங்காரம் செய்வதையும் பார்க்கலாம்.

அல்லாஹ்வும், ரசூலும் ஒன்று என்ற அத்துவைத கோட்பாட்டைத் தந்திரமாக இஸ்லாத்தில் நுழைக்க மனிதனும் தெய்வமாகலாம் என்று கூறும் சூஃபிகள் செய்யும் சூழ்ச்சியாகும் இது. இந்த சூழ்ச்சியின் அடிப்படையில்தான் தமிழ் மொழியில் இறைவனையும் குறிக்கும் 'பெருமானார்' பதத்தை நபி(ஸல்) அவர்களுக்கு வலிய திணித்து அதை நடை முறைப்படுத்தியதாகும். மனிதனும் தெய்வமாகலாம் என்ற அத்துவைத சூஃபிஸ கொள்கையை ஆதரிக்கும் புரோகித முல்லாக்களும் அவர்களின் பக்த கோடிகளும் 'பெருமானார்' பதத்தை விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்கலாம். ஆனால் சூஃபிஸ கொள்கையை மறுத்துரைக்கும் புரோகித முல்லாக்களும் அவர்களின் பக்த கோடிகளும் இந்த 'பெருமானார்' பதத்தை விடாப்பிடியாகப் பிடித்திருப்பதுதான் ஆச்சரியம். 'பெருமனார்' என்று தயக்கமின்றிக் குறிப்பிடலாம் என்று கூறியிருப்பது அவர்களுக்கும் புரோகிதத்தை வளர்ப்பதிலுள்ள ஆர்வத்தையே உறுதிப்படுத்துகிறது.

'பெருமானார்' என்று நபி(ஸல்) அவர்களை அழைக்க குர்ஆனிலும், ஹதீஸிலும் ஆதாரமில்லை. **4:59** இறைக்கட்டளைப்படி உண்மையான இறை விசுவாசிகள் இந்த 'பெருமானார்' பதத்தைப் புறக்கணித்து விடுவார்கள். கொஞ்சமும் தயங்க மாட்டார்கள். அப்படியும் விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களே என்பதற்காக குறைந்த பட்சம் அவ்வாறு 'பெருமானார்' போன்ற பதங்களை நபி(ஸல்) அவர்களுக்குச் சூட்டுவதில் மார்க்கத்தில் தடை இல்லாமல் இருக்கிறதா என்று பார்த்தால் மிகக் கடுமையான தடைகளையே பார்க்க முடிகிறது; அவற்றையும் பார்ப்போம்.

**இப்னு மர்யமை கிறிஸ்தவர்கள் மிகைப்படப் புகழ்ந்தது போன்று, நீங்கள் என்னை மிகைப்படப் புகழாதீர்கள். எனினும் (என்னை) அல்லாஹ்வுடைய அடியார் என்றும், தூதர் என்றும் கூறுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை உமர்(ரழி) கேட்டதாக உரைத்ததை நான் கேட்டேன்.**

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி), நூல் : ரஜீன்*

இப்னு மர்யமை கிறிஸ்தவர்கள் அல்லாஹ்வின் குமாரர் என்றே மிகைப்பட புகழ்கிறார்கள். ஆனால் முஸ்லிம்களோ நபி(ஸல்) அவர்களை 'பெருமானார்' என்று அதைவிட மிகைப்பட புகழ்ந்து அல்லாஹ்வும், ரசூலும் ஒன்று என்று முஸ்லிம்களில் பலர் தப்பாக விளங்க வழிவகை செய்கின்றனர். கிறிஸ்தவர்களின் செயலையே கண்டித்த நபி(ஸல்) அவர்கள் இந்த புரோகித முல்லாக்களின் இச் செயலை ஏற்பார்களா? இன்னும் ஒரு ஹதீஸை பாருங்கள் :

**"பனூ ஆமிர் தூதுக்குழுவுடன் நானும் நபி(ஸல்) அவர்களிடம் சென்றிருந்தேன். அப்போது நாங்கள் அவர்களை நோக்கி, 'நீங்கள் எங்களின் தலைவர்' என்று கூறினோம்; அதற்கு அவர்கள், தலைவன் அல்லாஹ்வே! என்று கூறினர்; 'தாங்கள் எங்களை விட' மாண்பு மிக்கவர், பெரும் கொடையாளர் என்றோம்; அதற்கு அவர்கள் இவ்விதம் கூறுங்கள், அல்லது இதில் சிலவற்றைக் கூறுங்கள்; (இறைவனுக்குரிய அடைமொழிகளைக் கொண்டு என்னை வர்ணிப்பதன் மூலம்) உங்களுக்கு**

**உறுதுணையாக ஷைத்தானை அழைக்காதீர்கள்’** என்று கூறினர்.

*அறிவிப்பாளர் : மத்ரஃப் இப்னு அப்துல்லாஹ்,*

*நூல் : அபூதாவூது*

இந்த ஹதீஸின் அரபி மூலத்தில் ‘ஸய்யிது’ என்ற பதம் வந்துள்ளது. அதையே தலைவர் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ‘ஸய்யிது’ என்ற பதம் சர்வ சாதாரணமாக ‘தலைவர்’ என்ற பொருளில் அன்றிலிருந்து இன்று வரை புழக்கத்தில் இருந்து வரத்தான் செய்கிறது. நபி(ஸல்) அவர்களே அரபுகளின் சில கோத்திரத்தாரின் தலைவர்களை ‘ஸய்யிது’ என்று அழைத்ததாக ஹதீஸில் பார்க்கிறோம். உமர்(ரழி) அவர்கள் பிலால்(ரழி) அவர்களை ‘யா ஸய்யிதீ’ தலைவர் அவர்களே என்று அழைத்ததாக ஹதீஸில் வந்துள்ளது. விஷயம் இவ்வளவு தெளிவாக இருக்க பனூ ஆமிர் தூதுக்குழு தன்னை ‘யா ஸய்யிதீ’ என்று அழைத்ததை நபி(ஸல்) அவர்கள் ஏன் தடுத்தார்கள்? ஸய்யிது அல்லாஹ் என்று ஏன் கூறினார்கள்? அவர்களின் இந்தத் தடைக்குப் பொருள் இல்லையா? தகுந்த காரணம் இல்லையா? இது சிந்திக்க வேண்டிய விஷயம் இல்லையா? ஆம்! மற்றவர்களுக்கு பயன்படுத்தப்பட்ட ‘ஸய்யிதீ’ என்ற பதத்தை தனக்கு உபயோகப்படுத்தும் போது மட்டும் “ஸய்யித் அல்லாஹ்” என்று கூறி அவர்கள் தடுத்ததன் நோக்கம் என்ன? தான் அல்லாஹ்வின் தூதராக இருப்பதால் தன்னை அல்லாஹ்வுடன் இணைத்து மக்கள் தவறாக தன்னை தெய்வீக அந்தஸ்து உள்ளவராக எண்ணுவதற்கு இடம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற முன் ஜாக்கிரதையுடன் நபி(ஸல்) செயல் பட்டுள்ளனர்.

ஆனால் அதற்கு மாறாக இந்த புரோகித முல்லாக்களும் அவர்களின் பக்த கோடிகளும், நபி(ஸல்) அவர்கள் தன்னைப் பற்றிக் கூறிய இந்த நேரடியான ஹதீஸை புறக்கணித்து விட்டு, நபி(ஸல்) அவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு இந்த ‘ஸஸ்யித்’ பதம் பயன்படுத்தப்பட்டுள்ள ஹதீஸ்களை ஆதாரமாகக் காட்டி, சாதாரண மனிதர்களுக்கே இந்த ‘ஸய்யித்’ பதம் பயன்படுத்தப்பட்டுள்ளபோது, மனிதப் புனிதரான நபி(ஸல்) அவர்களை ‘ஸய்யித்’ என்று அழைப்பதில் தவறு என்ன இருக்க முடியும்? என்று கேள்வி கேட்டு தங்கள் கற்பனையைப் புகுத்தி மக்களை திசை திருப்பி தவறிழைக்க வைக்கின்றனர். மற்ற மனிதர்களுக்குச் சாதாரணமாக பயன்படுத்தப்பட்டுள்ள ‘ஸய்யித்’ என்ற பதத்தை தனக்கு பயன்படுத்தப்படுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்திருக்கிறார்களே? காரணமில்லாமலா தடுத்திருப்பார்கள்? தக்க காரணம் கொண்டே தடுத்திருப்பார்கள். அவர்கள் தடுத்துள்ளதை நாம் செய்யக்கூடாது. அவர்களை ‘ஸய்யித்’ என்றோ, இது போல் இறைவனோடு இணைத்து கற்பனை செய்ய வழிவகுக்கும் ‘பெருமானார்’ போன்ற பதங்களையோ பயன்படுத்தக் கூடாது என்ற நேரான சிந்தனை இந்த புரோகிதர்களுக்கும், அவர்களின் பக்த கோடிகளுக்கும் ஏற்படுவதாக இல்லை. புரோகிதர்கள் மக்களுக்கு நேர்வழியைப் போதிக்க மாட்டார்கள்; வழிகேட்டையே மார்க்கமாகப் போதிப்பார்கள் என்ற எமது முடிவையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இல்லை என்றால் இந்த ‘பெருமானார்’ பற்றி நாம் பல முறை குர்ஆன், ஹதீஸ் நேரடி ஆதாரங்களைக் கொண்டு தெள்ளத் தெளிவாக எழுதியும், மீண்டும் மீண்டும் விடாப்பிடியாக அதை நியாயப்படுத்திக் கொண்டிருப் பார்களா? அவர்கள் வெளியிடும் வார, மாதா, மாதம் இருமுறை இதழ்களைப் புரட்டிப்பாருங்கள். நபி(ஸல்) அவர்களைக் குறிப்பிட வேண்டிய இடங்களில் பெருமானார், பெருமானார்

என்றே குறிப்பிட்டு எழுதுகின்றனர்.

நபி(ஸல்) அவர்கள் நினைவு படுத்தப்பட்டால் அவர்கள்மீது ஸலவாத்துச் சொல்ல வேண்டும்; அதை நினைவு படுத்தியே (ஸல்) என்று சுருக்கமாக அடைப்புக் குறிக்குள் எழுதப்படுகிறது. அப்படிக் குறிப்பிடும்போது 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' என்று சொல்லிக் கொள்ளவேண்டும். ஆனால் இவர்கள் (ஸல்) என்று குறிப்பிடுவதை விட்டு விட்டாலும் 'பெருமானார்' என்று எழுதுவதை விட்டு விடுவதாக இல்லை. அந்த அளவு வெறித்தனமாக நடந்து கொள்கின்றனர். சூஃபிகள் போதித்த மனிதனும் தெய்வமாகலாம் என்ற மாற்றுமத 'அத்துவைத' போதனையை இஸ்லாத்தில் நுழைப்பதில் இந்த புரோகித முல்லாக்களுக்கும் அவர்களின் பக்த கோடிகளுக்கும் அந்த அளவு ஆர்வமும் வெறித்தனமும் இருப்பதையே இது காட்டுகிறது.

**அல்லாஹ்வின்மீதும், இறுதி நாளின்மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது.**

*அல்குர்ஆன் 33:21*

**அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப் பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசம் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ, பெண்ணுக்கோ உரிமை இல்லை. ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.**

*அல்குர்ஆன் 33:36*

**நீங்கள் உங்கள் மார்க்கம் பற்றி அல்லாஹ்வுக்குக் கற்றுக் கொடுகிறீர்களா? அல்லாஹ்வோ வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் நன்கு அறிகிறான். அன்றியும் அல்லாஹ் அனைத்துப் பொருள்களையும் நன்கு அறிவான் என்று (நபியே!) நீர் கூறும்.**

*அல்குர்ஆன் 49:16*

(நபியே!) இன்னும் நாம் உமக்கு வஹீ மூலம் அறிவித்தோமே அதை விட்டும், அதல்லாததை நம்மீது நீர் இட்டுக்கட்டிக் கூறும்படி உம்மைத் திருப்பிவிடவே அவர்கள் முனைந்தார்கள்; (அவ்வாறு நீர் செய்திருந்தால்) உம்மை தம் உற்ற நண்பராகவும் அப்போது எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

*அல்குர்ஆன் 17:73*

மேலும், நாம் உம்மை (ஹக்கான பாதையில்) உறுதிபடுத்தி வைத்திருக்க வில்லையெனின் நீர் கொஞ்சம் அவர்கள் பக்கம் சாய்ந்து போயிருத்தல் கூடும்.

*அலகுராஆன 1/:/4*

(அவ்வாறு நீர் சாய்ந்திருந்தால்) நீர் இவ்வாழ்நாளில் இரு மடங்கு (வேதனையும்,) மரணத்தில் இரு மடங்கு (வேதனையு)ம் நுகருமாறு நாம் செய்திருப்போம்; பின்பு, நமக்கு எதிராக உமக்கு உதவியாளர் எவரையும் நீர் காணமாட்டீர்.

*அல்குர்ஆன் 17:75*

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்; உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும்.

*(அல்குர்ஆன் 4:59)*

இதன் பின்னர் உம்மை ஷரீஅத்தில் (மார்க்கத்தில்) ஒரு நேரான வழியில் நாம் ஆக்கியுள்ளோம். ஆகவே நீர் அதனையே பின்பற்றுவீராக; அன்றியும், அறியாமல் இருக்கின்றார்களே அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றாதீர்.

*(அல்குர்ஆன் 45:18)*

மக்களின் திருப்தியைப்பெற அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றுவது குறித்து நபிக்கே இந்த அளவு கடுமையான எச்சரிக்கை என்றால் மற்றவர்கள் தப்ப முடியுமா?

வல்லமை மிக்க அல்லாஹ்வின் இந்த கடுமையான எச்சரிக்கைகள் எல்லாம் இந்தப் புரோகித முல்லாக்களுக்கும் அவர்களது பக்த கோடிகளுக்கும் **செவிடன் காதில் ஊதிய சங்கு** என்பார்களே அதே நிலைதான்.

**அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்களை (ஸாதாத்துகள், அகாபிரீன்கள், சூஃபிகள், இமாம்கள்) எந்த வழியில் கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்** என்று கூறுகிறார்கள். என்ன! அவர்களுடைய மூதாதையர்கள் (ஸாதாத்துகள், அகாபிரீன்கள், சூஃபிகள், இமாம்கள்) எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா? **(2:170)** என்று குறைஷி காஃபிர்கள் கூறியதையே இந்த புரோகித முல்லாக்களும், அவர்களின் பக்த கோடிகளும் இந்த பெருமானார் போன்ற பல விஷயங்களில் கூறி வருகின்றனர்.

குர்ஆன், ஹதீஸ் ஆதாரமில்லாத எந்த ஒன்றையும், எந்த நிலையிலும் அதை உலக முஸ்லிம்கள் அனைவரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டாலும் அது ஒரு போதும் மார்க்கம் ஆகாது என்பதை

அனைவரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டாலும் அது ஒரு போதும் மார்க்கம் ஆகாது என்பதை முஸ்லிம்கள் உணர்வார்களாக!.

எனவே இந்த புரோகித முல்லாக்களை நம்பி அவர்களைக் கண் மூடிப்பின் பற்றும் பக்த கோடிகள் சிறிது கண் விழித்து குர்ஆன், ஹதீஸை உற்று நோக்கும்படி வேண்டுகிறோம். அதுவே அவர்களைக் கரை சேர்க்கும். இல்லை என்றால் **33:66,67,68** குர்ஆன் வசனங்கள் எச்சரிப்பது போல் நாளை நரகில் கிடந்து வெந்து கொண்டு ஓலமிடும் அவல நிலை ஏற்படும் என எச்சரிக்கிறோம். அல்லாஹ் பாதுகாப்பானாக.